பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

01 09 2025 MONDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கல்வித்துறையில் செயற்கை தொழில்நுட்பம் கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

3. சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 86 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

4. தமிழகத்தில் 3 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஜெர்மனியின் மூன்று நிறுவனங்கள் இன்று கையெழுத்திட்டுள்ளன.

5. Fujairah சர்வதேச ஜூனியர் செஸ் போட்டியில் இந்தியாவின் Pranav Venkatesh பட்டம் வென்றார்.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<<>>>>>

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாகவும் திரு நரேந்திர மோடி அதில் கூறியுள்ளார்.

இதனிடையே. இந்த நிலநடுக்கத்தில் 800-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆப்கானிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

வேளாண் துறையின் செயல்பாடுகள் குறித்து மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தலைமையில் இன்று புதுதில்லியில் உயர்நிலை ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

பல்வேறு மாநிலங்களின் அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாப் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று திரு சிவ்ராஜ் சிங் சௌகான் இந்த கூட்டத்தில் உறுதியளித்தார்.

<<<<<<<>>>>>

கல்வித்துறையில் செயற்கை தொழில்நுட்பம் கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழுமத்தின் நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

கல்வித்துறையின் வளர்ச்சியில் இந்த குழுமம் முக்கிய பங்கு வகித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு இந்த துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்து திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

<<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம், ஒரு லட்சத்து 86 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில், இது 6 புள்ளி ஐந்து சதவீதம் அதிகமாகும் என்று நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>

உயிரி தொழில்நுட்பத்தின் முனையமாக உருவெடுக்கும் திறன் இந்தியாவுக்கு உள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உயிரி தொழில்நுட்பம் அனைத்து துறைகளையும் சென்றடைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>

மக்கள் பிரதிநிதிகள் சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்ற அவைகளின் கண்ணியத்தை காக்கும் வகையில் செயல்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சிலர் அரசியல் ஆதாயத்திற்காக சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்து வருவதாக குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தின் மாண்புகளை பாதுகாக்கும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகள் சுமூகமாக நடைபெறுவது ஜனநாயகத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பாதுகாக்கும் என்றும் திரு கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<<<<>>>>>

தேர்தல் ஆணையத்திற்கு எதிராக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக பிஜேபி குறை கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ரவிசங்கர் பிரசாத், அரசியல் சாசன அமைப்புகளின் மாண்புகளை குலைக்கும் வகையில் திரு ராகுல்காந்தி செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் தெரிவிப்பதை திரு ராகுல்காந்தி வாடிக்கையாக கொண்டுள்ளதாகவும் திரு ரவிசங்கர் பிரசாத் கூறினார்.

<<<<<<<>>>>>

பீகாரில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி மேற்கொண்ட வாக்காளர் உரிமை யாத்திரை இன்று நிறைவடைந்தது.

கடந்த 17-ஆம் தேதி தொடங்கிய இந்த யாத்திரையில் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி கூட்டணி தலைவர்கள் பலர் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>

பெட்ரோலுடன் 20 சதவீத எத்தனாலை கலக்கும் திட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தலைமை நீதிபதி திரு பி ஆர் கவாய், நீதிபதி திரு வினோத் சந்திரன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

முன்னதாக, மத்திய அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், பெட்ரோலுடன் எத்தனாலை கலக்கும் இத்திட்டம் கரும்பு விவசாயிகளுக்கு பயன் அளிக்கும் என்று கூறினார்.

<<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய உள்துறை அமைச்சர் இன்று ஆய்வு செய்தார்.

பின்னர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

பாதிப்புகளை ஆய்வு செய்யும் மத்தியக்குழுவின் அறிக்கை பெறப்பட்டபின் உரிய நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மீட்புப்பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<<>>>>>

பஞ்சாபில் மழை-வெள்ள பாதிப்பு காரணமாக கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 29 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

அதிகபட்சமாக, பதான்கோட் மாவட்டத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குர்தாஸ்பூர் பகுதியில் மட்டும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் 3 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஜெர்மனியின் மூன்று நிறுவனங்கள் இன்று கையெழுத்திட்டுள்ளன.

அரசு முறைப்பயணமாக ஜெர்மனி சென்றுள்ள முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம், 6 ஆயிரத்து 250 வேலைவாய்ப்புகள் உருவாகக்கூடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

தெலங்கானா சட்ட மேலவையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கான உச்சபட்ச வரம்பை ரத்து செய்வதற்கான மசோதா நிறைவேறியது.

உள்ளாட்சித் அமைப்புகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 42 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதற்கு ஏதுவாக இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, நேற்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் தற்போது சட்ட மேலவையிலும் நிறைவேறியுள்ளது.

இதனையடுத்து இரு அவைகளின் நடவடிக்கைகளும் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன.

<<<<<<<>>>>>

அஞ்சல் துறையின் வங்கி சேவை எட்டாண்டுகளை பூர்த்தி செய்துள்ளது.

இதுவரை 12 கோடி வாடிக்கையாளர்களுக்கு வங்கி சேவை வழங்கி வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாடு முழுவதும் ஒரு லட்சத்து 64 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அஞ்சல் அலுவலர்கள் மூலம் இந்த சேவை வழங்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்து 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அஞ்சல் ஊழியர்கள் வங்கி சேவை வழங்கி வருகின்றனர்.

ஊரகப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் நம்பிக்கை பெற்ற வங்கியாக அஞ்சல்துறையின் வங்கி சேவை திகழ்கிறது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

ஆகாஷவாணியின் கோல்டு பண்பலை அலைவரிசை 24 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது.

2001-ஆம் ஆண்டு இதேநாளில் தொடங்கப்பட்ட இந்த சேவை, செய்தி, நடப்பு விவகாரங்கள் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது.

கோவிட் பாதிப்பு காலத்தில் இந்த பண்பலை சேவை பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது.

கோவிட் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் இது முக்கிய பங்கு வகித்தது.

<<<<<<<>>>>>

பாகிஸ்தானில் ராணுவ ஹெலிகாப்டர் விழுந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த ஐந்து பேர் உயிரிழந்தனர்.

ஹெலிகாப்டர் தளம் ஏற்படுத்தப்பட உள்ள பகுதியில் ஹெலிகாப்டரை இறக்கி சோதனை மேற்கொண்டபோது இந்த விபத்து நேரிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொழில்நுட்ப கோளாறே இந்த விபத்துக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

தென்கொரிய ராணுவத்தால் நடத்தப்படும் Voice of Freedom வானொலி சேவை நிறுத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவுடனான பதற்றத்தை தணிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தென்கொரியா அறிவித்துள்ளது.

1962-ஆம் ஆண்டு முதல் இந்த வானொலி சேவை வழங்கப்பட்டு வருகிறது.

வானொலி சேவை ரத்து செய்யப்பட்ட நிலையில் எல்லைப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிகளும் அகற்றப்பட்டுள்ளதாக தென்கொரியா கூறியுள்ளது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐக்கிய அரபு எமிரேட்டின் Fujairah -ல் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் செஸ் போட்டியில் இந்தியாவின் Pranav Venkatesh பட்டம் வென்றார்.

இப்போட்டியின் ஒன்பதாவது சுற்று முடிவில் ஏழு புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

--------------

தஜிகிஸ்தானில் நடைபெற்றுவரும் CAFA கோப்பைக்கான கால்பந்து போட்டியில் இந்தியா தற்போது ஈரானை எதிர்த்து ஆடிவருகிறது.

---------------

ஐரோப்பிய கோப்பை பாரா வில்வித்தை போட்டியில் இந்தியா 4 தங்கம், நான்கு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

---------------

ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.

பீகாரின் Rajgir -ல் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

------------------

அமெரிக்க ஓபன் ஜுனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--------------

பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச ஜுனியர் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் Bhavya Chhabra முதலிடத்தை பிடித்துள்ளார்.

-------------

செக் குடியரசில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

------------

உலகக்கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கான பரிசுத்தொகை 297 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி, வெற்றிபெறும் அணிக்கு 39 கோடியே 55 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது.

<<<<<<<>>>>>